**செய்தி வெளியீடு எண்: 33** **நாள்: 31.07.2025**

**<u>தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் 'ஆளுநர் விருதுகள் – 2025' - க்கான பரிந்துரைகள் மற்றும் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது</u>**

தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் சார்பாக 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் "ஆளுநர் விருதுகள் 2025" ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகள் வரவேற்கப்பட்டன. அதன்படி விண்ணப்பங்களை சமர்பிப்பதற்கான கடைசி நாளாக ஆகஸ்ட் 14, 2025 மாலை 05:00 மணி வரை நிர்ணயிக்கப்பட்டது.

தற்போது "ஆளுநர் விருதுகள் 2025" ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் ஆகஸ்ட் 20, 2025 மாலை 05:00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பங்களை, தமிழ்நாடு ஆளுநர் மாளிகை இணையதளத்தில் (**https://tnrajbhavan.gov.in/**) வெளியிடப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து, rajbhavantwoawards2025@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு குறிப்பிட்ட கால நேரத்திற்குள் மென் நகலை அனுப்பிவைக்க வேண்டும். மேலும், துணை ஆவணங்களுடன் விண்ணப்பத்தின் வன் நகலை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்:

**ஆளுநரின் துணைச் செயலாளர் மற்றும்**
**கட்டுப்பாட்டு அலுவலர்,**
**ஆளுநர் செயலகம்,**
**ஆளுநர் மாளிகை,**
**கிண்டி, சென்னை -600 022.**

........................................................................................................................

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு:-**

**நாள்: 31.07.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**